# .மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி
# அசல் வழக்கு எண்.107/2017

PW2 –கலியபெருமாள், த/பெ. பிச்சைபிள்ளை
நாள்–03.04.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>குறுக்கு விசாரணை :</u>**

எனது ஊர் சின்னபெருந்தோட்டம் என்றால் சரிதான். தாவா சொத்து திருவெண்காடு கிராமம் சாலைக்காடு தெருவில் அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் தாவா சொத்திற்கும் சுமார் 3 கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். 2–ம் வாதி அழைத்தின் பேரில்தான் நான் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் புல எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். குருமூர்த்தியின் தகப்பனார் பெயர் என்ன என்றால் நாராயணன். நாராயணனும் நானும் நண்பர்கள் என்றால் ஒருவருக்கொருவர் தெரியும். நான் கூலி வேலைதான் செய்து வருகிறேன்.

தாவா சொத்தினை நாராயணசாமி கிரய வாங்கிய பத்திரத்தை நான் பார்த்ததுண்டா என்றால் இல்லை. நாராயணசாமி வீட்டிற்கும் தாவா சொத்திற்கும் சுமார் 100 அடி இருக்குமா என்றால் இருக்கும். பிரதிவாதி தாவா சொத்தை ஆறுமுகத்தின் மனைவி காசாம்பு என்பவரிடம் கிரயம் பெற்றுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் கேள்விபட்டுள்ளேன். சாட்சி பின்னிட்டு அது பற்றி எனக்கு தெரியாது என கூறுகிறார். நாராயணசாமி இறந்த பிறகு வாதிகள் அனைவரும் ஊரைவிட்டு வெளியேறிவிட்டார்கள் என்றால் சரியல்ல. குருமூர்த்தி மட்டும் சென்னையில் வசித்து வருகிறார். என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது எனவும் ஆதாயத்திற்காக குருமூர்த்தி

**கேட்டுக்கொண்டதிற்கு இனங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**